பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Dmc

Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 12 | 27 - 12 - 94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 312

## க.பொ.த உயர்தர பரீட்சை முடிவில் வடபகுதி மாணவர் முன்னணி

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒவ்வொரு கல்வி மாவட்ட ரீதியாக பல்கலைக்கழகங்களுக்கு செல்ல தகுதியுடையோருக்கான வீதத்தில்30 கல்வி நிர்வாக மாவட்டங்களிலும் முல்லைத்தீவு மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு கல்வி மாவட்டங்களிலும் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் அவர்களில் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதிபெற்றோருக்கும் இடையிலிருந்து இவ்வீதம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்படி முல்லைத்தீவு 58.31 வீதத்தைப் பெற்று முதலிடத்தையும் யாழ் மாவட்டம் 57 45 வீதம் பெற்று இரண்டாம் இடத்தையும், குளியாப்பிட்டிய கல்வி நிர்வாக மாவட்டம் 57.20 வீதத்தை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. நிக்கவரெட்டிய 54.4 வீதத்தைப் பெற்று நான்காம் இடத்தையும் மன்னார்53.65 வீதத்தையும் பெற்று (6ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப்பாதை திறப்பது குறித்து 2-ம் கட்ட பேச்சில் ஆராயப்படும்

## ஆனையிறவு பகுதியில் 4போராளிகள் வீரச்சாவு

கடந்த 24-ம், 25-ம் திகதிகளில் ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற இரு திடீர் மோதல்களில் நான்கு விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கடந்த 24-ம் திகதி ஏற்பட்ட திடீர்மோதலில்,

★ மேஜர் இதயன்; சிறிஸ்கந்தராஜா காந்தரூபன் கிராமக்கோட்டடி பருத்தித்துறை சொந்தஇடம் வெற்றிலைக்கேணி)

★ கப்டன் சுரேந்தர்/தட்சணாமூர்த்தி: சின்னத்தம்பி குணநாயகம் சங்கத்தடி, பூவரசங்குளம் வவுனியா (சொந்தஇடம் பாவற்குளம்)

ஆகிய இருபோராளிகள் வீரச்சாவடைந்தனர்-

கடந்த 25-ம் திகதி ஏற் (6ஆம் பக்கம் பார்க்க)

## தீக்குச்சி வெடியினால் மேலும் ஒருவர்விரல்இழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்குச்சி மருந்தில் வெடி செய்து விளையாடிய மேலும் ஒருவர் நேற்று படுகாயமடைந்தார்.

மேற்படி தீக்குச்சி மருந்தில் வெடிசெய்து விளையாடிய மூவர் நேற்று முன்தினமும் படுகாயமடைந்தது தெரிந்ததே.

பெரியளவில் தீக்குச்சி மருந்தில் வெடி செய்து விளையாடிய கோப்பாய் தெற்கைச் சேர்ந்த முருகையா விஜயராஜ் (வயது 15) என்பவரே அது வினையானதில் தனது இடதுகை விரல்கள்இரண்டை நேற்று இழந்தார்.

## பாதுகாப்புத்துறைவட்டாரங்கள்தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது பூநகரிப் பாதையை திறந்துவிடுவது குறித்து ஆக்கபூர்வமாக ஆலோசிக்கப்படும் எனவும் போர்நிறுத்தம் பற்றியும் ஆராயப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவித்த அவ் அதிகாரி பரிசுத்த பாப்பரசரின் வருகைக்கு முன்பாக பாதைதிறப்பது சாத்தியப்படுமா என்பதில் சந்தேகம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதுபற்றி சண்டே ரைம்ஸ் கூறுகையில், பூநகரிப்பாதையே திறக்கப்படவேண்டும் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வலியுறுத்தி வருகிறார். ஆனால் இராணுவம் அதற்கு இணங்க மறுக்கிறது.

எனினும் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைத் திகதி குறித்த அறிவிப்பால் குழப்ப நிலை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 30-ம் திகதி கொழும்பில் நடைபெறும் என சிறிலங்கா வானொலியில் அறிவிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக பரீட்சார்த்திகளிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30-ம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனாலேயே இப்பரீட்சை தொடர்பாக குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

அரசின் இக் குழப்பமான அறிவித்தலைத் தொடர்ந்து யாழ். மாவட்ட பரீட்சார்த்திகள் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து மேலதிக அரச அதிபர் இப்பரீட்சை தொடர்பான மதளிவான (6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு லொட்ஜில் பட்டப்பகலில் கொள்ளை

### பல லட்சம் ரூபா தமிழர் இழந்தனர்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் அமைந்துள்ள லொட்ஜ்ஒன்றில் தங்கியிருந்த நூற்றிற்கு மேற்பட்ட தமிழர்களிடம் பட்டப்பகலில் நகை, பணம் உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆறுபேர் கொண்ட கொள்ளையர் கோஷ்டி கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

லொட்ஜில் தங்கியிருந்த அனைவரையும் சோதனை

தாக கொள்ளையர்கள் கூறிவிட்டு கொள்ளையில் ஈடுபட்டுளனர்.

இச்சம்பவம் கடந்த 23ஆம் திகதி அன்று பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: புறக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள லொட்ஜ்ஒன்றில் தங்கியிருந்த சுமார் 150 தமிழர்களிடம் இரண்டு வெள்ளை நிற வானில் வந்த ஆறு பேர்

## பாப்பரசரின் வருகைக்குமுன் பூநகரி திறக்கும் சாத்தியமில்லை

### பிரபலசெய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்கா

(கொழும்பு)

பாப்பாண்டவரின் வருகைக்கு முன்னர் பூநகரிப் பாதையைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட

எனவே பாப்பரசரைத் தரிசிக்க வரும் மக்களைப் பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான நட

எனினும் கப்பல் மூலம் பத்தாயிரம்பேரை அழைத்து வருவது என்பது முடியாத காரியம் என்றும் இத்தொகையில் அரைவாசிக்கும் குறை

## கல்வி மேம்பாட்டு கழக ஆசிரியர் தேர்வு அறிவிப்பு

வெளிமாவட்டத்தில் கல்வி மேம்பாட்டுக் கழக ஆசிரியராகக் கடமையாற்றத் தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விபரம் தமிழீழக் கல்விக் கழக நடுவப் பணியகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான குறுகிய காலப்பயிற்சிகள் 29,30,31-ம் திகதிகளில் கழக நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானம்

ச. சிற்தரன், செல்வி பலியற் சௌந்தரநாயகி, செல்வி ஜமுனா குலசிங்கம், திரு ந. ஜெயந்தன், திரு. இ. அருள்நேசன, செல்வி கே. துரைராஜா, செல்வி கோ. கனகசபை, செல்வி ர. ஆனந்தவடிவேல், திருமதி விஜயசெல்வி சிவகுமார், திரு. சொ. சிவகுமார், திரு. கோ.

கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

லொட்ஜில் தங்கியிருந்த அனைவரையும் சோதனை செய்யவே தாங்கள் வந்துள்ள துள்ள லொட்ஜொன்றில் தங்கியிருந்த சுமார் 150 தமிழர்களிடம் இரண்டு வெள்ளை நிற வானில் வந்த ஆறு பேர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் நினைவுநாள் போட்டி பரிசளிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவு நாள் போட்டிகளின்பரிசளிப்புவிழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கலை பண்பாட்டுக் கழக யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமணி தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழா யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறும் என நேற்று வெளியான செய்தி தவறானதாகும்.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் வழங்கவுள்ளார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, திரு. ச. காந்திதாசன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். உரையைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# இளநிலை கல்வித் தேர்வு முடிவுகள் வெளிவந்தன

[நல்லூர்]

தமிழீழ கல்விக் கழகத்தினால் ஆண்டு 8இல் கற்கும் மாணவர்களிற்கிடையே நடாத்தப்பட்ட இளநிலைக் கல்வித் தேர்விற்கான பரீட்சை முடிவுகள் நேற்றைய தினம் அவ்வக் கல்விக் கோட்டங்களில் வைத்து உரிய பாடசாலைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (17)

## தமிழ்மொழி மூல ஆசிரியர் பரீட்சை

# வினாத்தாள் வராமையால் பரீட்சார்த்திகள் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழிமூலமான ஆசிரியர்பற்றாக்குறை நிலவும்பாடசாலைகளில் தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் 28-ம் திகதி நடைபெற உள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது'

இதற்கான வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் இதுவரை வந்து சேரவில்லை. அத்துடன் இப்பரீட்சை அறிவிக்கப்பட்டபடி நடைபெறும் என்றோ அல்லது பிற்போடப்படுவது பற்றியோ இதுவரை எந்த தகவலும் யாழ் கல்வித்திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பரீட்சை தொடர்பான நிலைமையை தம

[6ஆம் பக்கம் பார்க்க]

கைக்கு முன்னர் பூநகரிப் பாதையைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை என பிரபல செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

தித்துறையிலிருந்து கப்பல் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வருவது என்பது முடியாத காரியம் என்றும் இத்தொகையில் அரைவாசிக்கும் குறைவானவர்களையே அழைத்து வர முடியும் என்றும் அவர் கூறினார்.

# சமாதான முயற்சிகளுக்காகவே ஆளுநர் பதவி ஏற்கிறேன்

## புதிய வடக்கு-கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா

[கொழும்பு]

அரசாங்கத்தின் எந்த பதவியையும் நான் ஏற்க விரும்பவில்லை. ஆனால் வடக்கு கிழக்கில் இன்று ஏற்பட இருக்கும் சமாதான முயற்சிக்காக ஆளுநர் பதவியை நான் ஏற்கின்றேன் என வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராகநியமனம் பெற்றமை தொடர்பாக முன்னாள் பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் செயலகத்தைவிட்டு வெளியேறும் போது ''லங்காதீப'' பத்திரிகைக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் தொடர்ந்து கூறுகையில், வடக்கு-கிழக்கு ஆளுநர் பதவி என்பது நாட்டிலுள்ள ஏனைய மாகாண ஆளுநர் பதவியை விட வித்தியாசமானது என்றும் தன்னால் இயன்ற வரை பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்ற முடியும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# வட-கிழக்கு ஆளுநராக காமினி பொன்சேகா

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார் இவர் ஆளுநர் பதவியை ஏற்க முன்னர் விரும்பவில்லை என்றும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் நடாத்திய இருமணிநேரப் பேச்சுக்களின் பின்னரே பதவியை ஏற்றுக் கொண்டார் என்றும், சிங்களப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது

இதேவேளை ஊவா மாகா

[6ஆம் பக்கம் பார்க்க]

# கண்ணிவெடியில் சிக்கிய பஸ் 40 அடிக்கு மேல் வீசப்பட்டது

## உயிர்தப்பிய சிபபாய் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கிய இராணுவப் பிரிவு சிங்க ரெஜிமன்டைச் சேர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்ணிவெடித் தாக்குதலில் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய் தகவல் தருகையில், கண்ணிவெடியில் சிக்கிய வாகனம் சுமார் 40 அடி தூரத்திற்கு மேலெழுந்து வீழ்ந்து சிதறியதாக குறிப்பிட்டார். கதிரவெளியிலிருந்து கிரான் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது இக் கண்ணிவெடித் தாக்குதல் தம்மீது நடத்தப்பட்டதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

காலப்பயிற்சிகள் 29,30,31-ம் திகதிகளில் கழக நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களின் விபரம் வருமாறு; வடிவேல், திருமதி விஜய செல்வி சிவகுமார், திரு. சொ. சிவகுமார், திரு. கோ. இராகவன், திரு. சொ. அமிர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு கோடி ரூபா பெறுமதியான

# போதைப் பொருட்களுடன் இரு இல. தமிழர் கைது

(கொழும்பு)

சென்னையில் இலங்கையைச் சேர்ந்த இரண்டு பேரிடமிருந்து - நான்கு கோடி ரூபாய் பெறுமானமுள்ள இரண்டு கிலோ பிரவுண் ஷுகர் போதைப்பொருளை பொலிசார் கைப்பற்றியுள்ளதாக இந்திய தொலைக் காட்சி தெரிவித்தது.

# காணாமற்போன தமிழர்; ஆராய விசாரணைக்குழு

(கொழும்பு)

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டமூலத்தின்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று விசாரணைக் குழுக்களை அமைத்துள்ளார்.

இவை தீவின் மூன்று வித்தியாசமான புவியியல் பிரதேசங்களில் ஆட்கடத்தல் காணாமல் போதல் பற்றிய விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அமைத்துள்ள மூன்று விசாரணைக் குழுக்களும் - காணாமல்போன ஆயிரக்கணக்கான தமிழர்கள் பற்றியும் விசாரணைகளை நடத்தும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜேவிபிகாலக் கொலைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணப்பம் நிறுத்தம்

பொதுசன பிரதிநிதித்துவமுடைய அமைப்புகளைப் பதிவு செய்தல தொடர்பாக பதிவுச்சான்றிதழ் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதால் இது தொடர்பாக விண்ணப்பப்படிவம் வழங்குதல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதென தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

## 'வீடெக்ஸ்' சம்பளப்பண கொள்ளையரின்

# ஆயுதக் களஞ்சியத்தில் நவீன ஆயுதங்கள் மீட்பு

[கொழும்பு]

வியாங்கொடை ''வீடெக்ஸ்'' நிறுவனத்தின் சம்பளப் பணத்தைக் கொள்ளையடித்த கோஷ்டியினுடையது எனக் கருதப்படும் ஆயுதக் களஞ்சியம் ஒன்று ராகம - வெல்பொலவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடித்த பணத்தின் ஒரு பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### மொத்த விற்பனை

கிறிஸ்மஸ் சோடனை, அழகுசாதனப் பொருட்கள், றேடியோ, கைக்கடிகாரம், எவர் சில்வர் பிளாஸ்ரிக் பொருள்கள், பாடசாலை- தையல் உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பொலித்தீன் வகைகளை மொத்தவிலையில் பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயா அழகு மாடம், 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-10902)

### விற்பனைக்கு

முட்டையிடும் பிராமா, சில்க்கு வெள்ளடியன், போலிஸ் ஸ்பங்குளர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; க. இந்திரகுமார் C/o சி. கனகரத்தினம் சங்கத்தானை (கந்தசுவாமி கோவில் வீதி) சாவகச்சேரி. (10507)

### பட்டயக் கணக்காளர் நிறுவனம்

க பொ. த. உயர்தரப்பரீட்சையில் 2 திறமைச்சித்திகள் பெற்றோர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களாக தம்மைப் பதிவுசெய்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு: இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (10509)

### ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்நடாத்தும் 'ஒளிவிழா' இன்று பிற்பகல் 3.00மணிக்கு சங்கத்தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறும் [22]

FIRST DEATH ANNIVERSARY

**Mrs. ANNE SABINA THIRUCHELVAM**
**27th December 1994**
**FONDLY REMEMBERED BY HER FAMILY**

திருமதி
ஆன் சபீனா
திருச்செல்வம்
விண்ணகம் எய்திய
முதலாம் ஆண்டு

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்- மாவட்ட கூட்டுறவுச் சபையின் 'விசேட பொதுக் கூட்டம்' எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை 10,00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள மேற்படி சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு,வை.செந்திநாதன் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் துணை

## முதலாவது பிறந்ததின அழைப்பிதழ்

28 - 12 - 94 புதன்



### செல்வன் உதயகுமார் செந்தமிழன் (அப்பு)

பேர் சொல்ல வந்த எங்கள் பிதாவின் மறுவுருவே
ஊர் புகழ வேண்டுமய்யா உந்தனது பண்புதனை
பார் முழுதும் புகழ் பரப்பும் கலையுடனே கல்வியதை
நீ கற்று நிலைநாட்டி நீடூழி வாழியவே!
உன் தமிழன் பரம்பரையின் உரிய நல்வீரமுடன்
நன் தமிழன் அழகாக நாளெல்லாம் வாழியவே
பைந்தமிழன் பாற்கடலில் பல்கலையும் நீ பயின்று
செந்தமிழன் வாழியவே நம் தமிழீழம் வாழியவே!

நாளை (28.12.94) காலை 9.30 மணியளவில் எமது குடும்பச் செல்வனின் முதலாவது பிறந்தின வைபவத்தை எமது சமய வழிபாட்டுடன் நிகழ்த்த விருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்புக் கலைஞர்கள் அனைவரையும் நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகை தந்து ஆசீர்வதிக்குமாறும், மாலை எமது இல்லத்தில் நடைபெறும் பிறந்த தின விழாவிலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இவரை வாழ்த்துவோர்**

அப்பா, அம்மா, அப்புச்சி, பெரிய மாமா, கிளி மாமி, மச்சாள்மார், கீதா, லதா, உஷா, வினோ, ரெத்தி மாமா, ரதி மாமி, குட்டிப் பெரியம்மா, பெரியம்மா, சின்னப் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா பார்த்திபன், தனுராஜ், அக்கா தாரணி, கீதாஞ்சலி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், கலைஞர்

வலி.கிழ.வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
வ/து - அச்சுவேலி

### 1) லொறிக்கு உருவமைத்தலும் வர்ணம் பூசுதலுக்குமான

## கேள்விப்பத்திரம்

எமது சங்கத்தின் த1-4198 லொறிக்கு (24/9273) உருவமைத்தலுக்கும் வர்ணம் பூசுவதற்குமான கேள்வி விண்ணப்பம்.

மேற்படி வாகனத்தை எமது சங்கத்தில் வேலை நேரத்தில் பார்வையிட்டு இதற்கான சங்கத்தின் கேள்விப்பத்திர படிவத்தில் 25/- செலுத்திப்பெற்று விண்ணப்பங்களை 30-12-94-ந்திகதிக்கு முன் தலைவர்,வலி கிழ.வடபகுதி ப நோ.கூ.சங்கம் ஆவரங்கால் புத்தூர் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
வ.கி.வ.ப.ப.நோ.கூ.சங்கம்

### 2) இரு சக்கர உழவு இயந்திரப்பெட்டி செய்வதற்கானதும் வர்ணம் பூசுதலுக்கானதுமான

## கேள்விப்பத்திரம்

எமது சங்கத்தின் இரு சக்கர உழவு இயந்திரப் பெட்டி செய்வதற்கும், வர்ணம் பூசுதலுக்குமான கேள்வி விண்ணப்பத்தை எமது சங்கத்தில் 25/- செலுத்தி பெற்று 30-12-94க்கு முன் தலைவர்,வலி.கிழக்கு வடபகுதி ப நோ.கூ.சங்கம் ஆவரங்கால் புத்தூர் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ அனுப்பி வைத்தல்வேண்டும்.

- பொதுமுகாமையாளர்
வ.கி.வ.ப.ப.நோ.கூ.ச.

### 3) இசுசு லொறிக்கு முன்பக்க ரின்கர் வேலை செய்தலும் வர்ணம் பூசுதலுக்குமான

## கேள்வி விண்ணப்பம்

எமது சங்க த1-4198க்கு ரின்கர் வேலை செய்தலும் வர்ணம் பூசுவதற்கும் கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. சங்கத்தில் 25/- கட்டி விண்ணப்பப்படிவத்தை பெற்று 30-12-94-ந் திகதிக்கிடையில் தலைவர், வ.கி.வ.ப.ப.நோ.கூ.சங்கம் ஆவரங்கால் புத்தூர் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றி பதிவுத்தபால் மூலமோ விண்ணப்பிக்கவும். சங்க வேலை நேரத்தில் பணிமனையில் வாகனத்தைப் பார்வையிடலாம்.

- பொதுமுகாமையாளர்
வ கி.வ.ப.ப.நோ.கூ.ச.

(சி-11018)

## துவாரம் இருந்ததால் டாறா மூழ்கியதாம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கு அருகே நீரில் மூழ்கிய டாறா என்ற கப்பல் கடந்த இருபது வருடங்களாக சேவையில் ஈடுபட்டிருந்தது எனவும், இக் கப்பலின் கீழ் தளத்தில் சிறு துவாரம் இருப்பதால் இதனைச் சேவையில் ஈடுபடுத்துவதில் பயனில்லை என்று கப்பல் துறைமுக இயக்குனர் சீ. பீ. ஜெயசிங்க 1993 யூன் 6-ம் திகதி தெரிவித்து இருந்தார் எனவும் இப்போது தெரிய வந்துள்ளது. இக்கப்பல் திருத்த வேலைகளுக்காக திருகோணமலையிலிருந்து சென்னைக்குச் செல்லும் வழியில் காலநிலை சீரின்மையால் காங்கேசன்துறையில் தரிக்க நேரிட்டது எனவும் நீண்டகாலம் இந்நிலை நீடித்தமையால் திருகோணமலைக்கு திரும்பிட நேரிட்டது எனவும், அப்போதுதான் முல்லைத்தீவுக்கு அருகே மூழ்கியது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தினசரி 60,000 டாலர்கள் கப்பல் வாடகை

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் ஆறு கப்பல்களை வாடகைக்கு, அமர்த்தியிருப்பதாகவும் இவை ஒவ்வொன்றுக்கும் நாளாந்தம் தலா பத்தாயிரம் அமெரிக்க டாலர் செலுத்த வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதையடுத்து சகல கொள்வனவு ஒப்பந்தங்களும் புதுப்பிக்கப்பட வேண்டிய ஒரு நிலை இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்,

## தாதியர் கோரிக்கையில் நியாயம் எதுவுமில்லை

### அமைச்சர் பௌசி தெரிவிப்பு

உயர்ந்த மாதாந்த சம்பளம் பெறும் தாதிமார்கள், ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவை கேட்பது நியாயமல்லை என சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

எனினும் இக்கோரிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருக்கும் நிலையில் அதற்கான முடிவு கிடைக்கும்வரை தாதிமார்கள் தங்கள் போராட்டங்களை கைவிட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனுமதியின்றி லீவுகளில் இருக்கும் தாதிமார்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

**27.12.1994**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**ராவ்** (மகாலிங்கம் அகிலன்- வீமன் காமம், தெல்லிப் பழை- யாழ்]

கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**மதன்** [கந்தசாமி சிவானந்தன்- அந்தனத்திடல், கப்பூது, கரவெட்டி-யாழ்]

1988-ம் ஆண்டு மட்டு -ஆரையம்பதிப் பகுதியில் தேசவிரோதிகளின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**முரளி** [பீதாம்பரம் நிக்சன் போல் 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம்- கிளிநொச்சி]

பூநொச்சிமுனைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

ஆன சப்னா
திருச்செல்வம்

விண்ணகம் எய்திய முதலாம் ஆண்டு நிறைவு.

நன்றியுடன்
நினைவு கூரும்

- குடும்பத்தினர்

[10506]

மாமி, மச்சாள்மார், கீதா, லதா, உஷா, வினோ, ரெத்தி மாமா, ரதி மாமி, குட்டிப் பெரியம்மா, பெரியம்மா, சின்னப் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா பார்த்தீபன், தனுராஜ், அக்கா தாரணி, கீதாஞ்சலி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், கலைஞர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

'உண்மை அன்பிற்கிணை உலகில் ஒன்றுமில்லை'

தங்கள் நல்வரவை நாடும்
பெற்றோர் திரு திருமதி உதயகுமார் சுகுணா
பேர்த்தியார் ஜானகி பாலசுந்தரம்

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(9870)

வ கி.வ.ப.ப.நோ.கூ.ச.

(சி-11018)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை இறைச்சிக் கடைகள் பற்றிய

# கேள்வி அறிவித்தல் -1995

இப்பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக் கடைக் குத்தகை [1- 1- 95 முதல் 31- 12- 95 வரை] 29- 12- 94 வியாழக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு இச்சபையின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் வழங்கப்படும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 29-12-94 முற்பகல் 10 மணிவரை சம்பந்தப்பட்ட உபஅலுவலகத்தில் அட்டவணையில் காட்டப்பட்ட பிணைப்பணத்தை செலுத்தி பெயரை பதிவு செய்து கொள்ளவேண்டும். ஏற்றுக்கொள்ளப்படுபவர் சம்பந்தப்பட்டபகுதிகளுக்கு சகல கட்டுப்பணங்களையும் செலுத்திய பின்னரே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

| இறைச்சிக்கடையின் பெயர் | பிணைப்பணம் | ஆகக்குறைந்த கேள்விக்தொகை |
|---|---|---|
| [1] நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல. 3 | ரூ 500. 00 | ரூ 6270. 00 |
| [2] நெல்லியடி மாட்டிறைச்சிக்- கடை இல. 1 | ரூ 1000. 00 | ரூ 88000. 00 |
| [3] நெல்லியடி மாட்டிறைச்சிக்- கடை இல 3 | ரூ 1000. 00 | ரூ 88000. 00 |
| [4] துன்னாலை தெற்கு- மாட்டிறைச்சிக் கடை | ரூ 250. 00 | ரூ 20900. 00 |
| [5] அந்திரான் சந்தை- மாட்டிறைச்சிக் கடை | ரூ 500. 00 | ரூ 11110. 00 |

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலோ உப-அலுவலகங்களிலோ அறிந்து கொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

[சி-11021]

## லயன் எயர் விமானசேவை!

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று பாப்பரசரிடம் ஆசிர்வாதம் பெறச்செல்வோருக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு:- யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்கும் வவுனியாவில் இருந்துவிமானமூலம்கொழும்பிற்கும் பின் அங்கிருந்து விமான மூலம் வவுனியாவிற்கும் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வருவதற்கு தங்குமிட வசதிகளுடன்.

ரூபா: 5000/-

மேலதிக விபரங்களுக்கு

தத்தம் பகுதி பங்குத் தந்தையுடன் கத்தோலிக்கர் தொடர்பு கொள்ளவும்.

★ குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளன.

[10508]

## யாழ் வணிகர் கழகம்
## பொதுச்சபைக் கூட்டமும்
## நிர்வாகசபைத் தெரிவும்

காலம்:- 27.01.95 வெள்ளிக்கிழமை
நேரம்:- பிற்பகல் 2.00 மணி
இடம்:- யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

விடுதலைப் புலிகள் அரசியல்துறை, தொழிற்துறை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். கூட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து சகல துறை வர்த்தகர்களும் தவறாது சமுகம் கொடுக்கவும்.

வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு பிரேரணைகள் முன் வைக்கப்பட இருப்பின் உறுப்பினர்கள் 1995.01.10-ம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்

பொதுச் செயலாளர்
யாழ் வணிகர் கழகம்.

(சி-11022)

**முரளி** [பீதாம்பரம் நிக்சன் போல் 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம்- கிளிநொச்சி]

பூநொச்சிமுனைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப்.அஜித்** (சுப்பிரமணியம் தேவராசா- ஆரையம்பதி -மட்டு]

**2-ம்லெப்.அர்ஜுன்** [சின்னத்தம்பி தயாளன்-ஆரையம்பதி- மட்டு]

**ராஜன்** [-தங்கராசா - மஞ்சத்தொடுவாய்- மட்டு]

புதூர் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நிக்கலஸ்** [சிறிமுருகன் - கூழாவடி, கொலனி]

மட்டு - மீயாங்குளம் பகுதியில் இந்தியப்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தீபன்** [கிருஷ்ணபிள்ளை சதாசிவம் - ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டு]

**தயான்** [சின்னத்தம்பி சக்திவடிவேல் ஆரையம்பதி - மட்டு]

1989- ம் ஆண்டு வவுனியா - நெளுக்குளத்தில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தரக்குதலில் வீரச்சாவெய்திய,

**மிரேஸ்** [இராசலிங்கம் சதீஸ்குமரன்- தெணியம்பை - - வல்வெட்டித்துறை]

1990 -ம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மாறன்** [சவரிமுத்து அமலதாஸ் - வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**செம்பவளம்** [செல்லத்துரை யாழின்பராசா - தென்னியங்குளம் - துணுக்காய்]

**லெப். குமரன்** [துரைசிங்கம் உதயகுமார் 2-ம் வட்டாரம், புங்குடுதீவு - 02]

1991 -ம் ஆண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது எமைப் பிரிந்த,

**வில்லியம்** [கௌரி இராஜேந்திரம் 115 -ம் கட்டை - கிளிநொச்சி]

1992 - ம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட வாகனவிபத்தில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப். கதிர்** [ஞானகுருபரன் சுதர்சன் - சித்தங்கேணி வட்டுக்கோட்டை - யாழ்[

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-11015]

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# புதிய பிரதேச செயலகங்கள் அமைப்பதில் இழுபறி நிலை

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகங்களுக்கு தகுதியான மூத்த அதிகாரிகளை மறுபங்கீடு செய்யும் வரை யாழ். மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்கள் அமைவதில் இழுபறி நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகங்களுக்கு முன்னர் அரசாங்க அதிபரின் செயலகங்கள் கொண்டிருந்ததை விட மிக அதிகமான அதிகாரங்களும் பொறுப்புகளும் வழங்கப்பட்ட காரணத்தினால், அச்செயலகங்களுக்கு இலங்கை நிர்வாகசேவை முதலாம் தரத்திற்கு குறைந்த எந்த அலுவலர்களையும் நியமிக்கக் கூடாது என யாழ். மாவட்ட முதன்மை அதிகாரி கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக நெருக்கடியான யாழ். மாவட்ட நிலைமையில் கனிஷ்ட நிர்வாக சேவை அலுவலர்கள், கூட்டுறவு, கமநலசேவை, திட்டமிடல், புனர்வாழ்வு ஆகிய அதிமுக்கிய துறைகளைக் கொண்டு நடத்தக்கூடிய ஆளுமையும் அனுபவமும்கொண்டிருப்பார்கள்எனத்தெரிவிக்கப்பட்டது.

பிரதேச மட்டத்தில் உள்ள மற்றைய சேவைகள் சார் உயர் அதிகாரிகளும் கனிஷ்ட நிர்வாகசேவைஅலுவலர்கள், பிரதேச செயலர்கள் பதவியில் அமர்ந்திருப்பதை அங்கீகரிக்காதநெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது. (தி),(இ)

## இடமாற்றங்கள்

பளை உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய ஐயாத்துரை கிளிநொச்சிக்கும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய செந்தில்நாதன் பளைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது. (86)

# சைக்கிள் திருட்டு பிடிபட்டது 19 சைக்கிள்களும் மீட்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி காவல்துறையினர் துவிச்சக்கர வண்டி திருட்டுகள் தொடர்பாக நடத்திய நடவடிக்கையில் ஒருவர் 19 சைக்கிள்களை திருடியுள்ளார். சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

வடமராட்சி வாதரவத்தைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தென்மராட்சி யாழ்ப்பாணம், வடமராட்சி போன்ற இடங்களில் சைக்கிள்களை திருடி தனது அயல் பகுதிகளில் மிகவும் குறைந்த விலைக்கு விற்று வந்துள்ளாராம்.

இதன்போது மேற்படி நபரை சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்திய போது திருட்டு அம்பலமானது.

இவரது விசாரணையின்படி காவல்துறையினர் இவரது பகுதிகளில் சைக்கிள் மீட்பு நடவடிக்கையினை நடாத்திய போது தற்போது 19சயிக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. எனினும் மேலும் சைக்கிள்கள் இருக்கலாம் என இவரது விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. (86)

# தினமும் 2 சைக்கிள்கள் காணாமல் போகின்றன

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வாரங்களுக்குள் யாழ்.நகர்ப் பகுதியில் பத்து துவிச்சக்கரவண்டிகள் திருட்டுப்போய் விட்டதாகத் தமிழீழ காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தினமும் சராசரி இரண்டு துவிச்சக்கர வண்டிகள் திருட்டுப்போய் விட்டதாகத் தம்மிடம் முறைப்பாடு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

துவிச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களின் கவனயீனமே பெரும்பாலானவை திருடப்படுவதற்குக் காரணம் என யாழ்.காவல் நிலையத்தினர் தரப்பில் கூறப்பட்டது. (22)

# சாவகச்சேரி மருத்துவமனை அம்புலன்ஸ் திருத்தவில்லை

சாவகச்சேரி மருத்துவமனையிலுள்ள நோயாளர்களுக்கான அம்புலன்ஸ் வண்டி பல மாதங்களாக திருத்தப்படாமையினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

மருத்துவமனை வட்டாரங்கள் இவ் அம்புலன்சுக்கான உதிரிப்பாகங்களின் தேவை குறித்து போதிய அக்கறை காட்டாமையே இது திருத்தப்படாமைக்கான காரணம் எனவும் அறியவருகிறது. இதனால் அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்கள் பலரும் பெரிதும் சிரமப்பட நேருவதாகவும் கூறப்படுகிறது. (86)

## உதைபந்தாட்டம்

அரியாலை சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் அமரர் E. K.குமரையா ஞாபகார்த்த ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் வியாழக்கிழமை பி. ப. 2.45 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெற உள்ளது,

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகமும் கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோத உள்ளன முதலாம் இடத்துக்கான போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் மோத உள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் நான்கு கழகங்களுக்கும் பணப் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன, (17]

# யாழ். மாவட்டத்திற்கு உதவுவதில் ஜேர்மனி அரசாங்கம் பின்னடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கான நிதி உதவிகளைச் செய்வதில் ஜெர்மன் சனநாயக குடியரசின் உதவித் திட்டம் வேண்டுமென்றே இழுத்தடிப்பு செய்வதாகவும், பின்னடிப்பதாகவும் நம்பகரமாகத் தெரியவருகிறது.

ஜெர்மன் சனநாயக குடியரசு உதவித் திட்டம் யாழ். மாவட்டத்தில் சில நிவாரணப் பணிகளைமேற்கொள்ளவும், சில மறுவாழ்வுப் பணிகளுக்காகவும் பல மில்லியன் ரூபாக்களை வழங்ுவது தொடர்பாக ஆறு அரச சார்பற்ற நிறுவனங்களுடனும், இரண்டு அரசாங்க திணைக்களங்களுடனும் இணக்கம் கண்டிருந்தது

இதன் அடிப்படையில் முதலாம் கட்ட நிதி வழங்கப்பட்டதுடன் நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இவற்றினை தொடர்ந்து மேற்கொண்டு பூர்த்தி செய்வதற்குத் தேவையான மிகுதி நிதியினை வழங்குவது தொடர்பாக இழுத்தடிப்புகளும், பின்னடிப்புகளும் இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் செயற்படும், அகதிகள் புனர்வாழ்வு நிதியம், அறவழிப் போராட்டக் குழு, தமிழர் புனர்வாழ்வு கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், வை. எம். சி. ஏ. போன்ற நிறுவனங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜெர்மன் சனநாயக குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் நிதியைப் பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு ஆரம்பத்திலேயே போரூட் நிறுவனம் மறுத்தமையும் இங்குசுட்டிக்காட்டத்தக்கது

இத் திட்டத்தின் கீழ் அறவழி போராட்டக் குழுவுக்கு 6மில்லியன் ரூபாவும், தமிழர் புனர் வாழ்வு கழகத்திற்கு 21.9 மில்லியன் ரூபாவும். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு 17.2 மில்லியன் ரூபாவும், வை. எம். சி. ஏ க்கு 22 மில்லியன் ரூபாவும் வரவேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திற்கு மட்டுமே இத் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் ரூபா இரண்டாம் கட்ட உதவு தொகையாக கிடைத்துள்ளது. (நி)

# அஸ்பெஸ்ரஸினால் புற்றுநோய் அபாயம்

(நவாலி)

இலங்கையில் ''அஸ்பெஸ்ரஸ்'' சீற் உற்பத்தியினால் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதாக ''சுற்றுப்புற சூழல்கள்'' அமைச்சின் செய்திக்குறிப்பொன்று தகவல் வெளியிட்டுள்ளது,

அஸ்பெஸ்ரஸ் சீற் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்கள் சூழலை அசுத்தமாக்குவதுடன் மனித வாழ்வுக்கு பெருமளவிலான தீங்குகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான ஆராய்ச்சியை கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் பீட விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# முட்டு நோய் நோயாளி பிரசவ வார்ட்டில் அனுமதி

(வடமராட்சி)

முட்டு வருத்தத்தினால் வேதனைப்பட்ட பெண் ஒருவர் பிரசவ வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்தது.

இது பற்றி மேலும் தெரிய வருகையில், சம்பவதினம் முட்டு வருத்தத்தினால் வேதனைப்பட்ட பெண் ஒருவர் வைத்திய அதிகாரியினால் சோதனை செய்யப்பட்ட பின்னர் பிரசவவார்ட்டுக்கு நேராக எடுத்துச் செல்லப்பட்டார்.

அந்த வார்ட்டுக்கு சென்ற பெண்ணிடம் பிரசவ சம்பந்தமான நடவடிக்கைகளை அங்குள்ள தாதியர் மேற்கொண்ட போது, இவருக்கு அப்படி எதுவும் இல்லை. முட்டு வருத்தம் தான் என்று தெரிய வைக்கப்பட்டது. பின்னர் அப்பெண் அதற்குரிய வார்ட்டுக்கு மாற்றப்பட்டார் (யோ)

# கசிப்பு விற்பனையாளர் மீது காவல்துறை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கசிப்பினை விற்பனைக்காக வைத்திருந்த இருவர் தமிழீழ காவல் துறையினரிடம் வசமாக மாட்டிக் கொண்டுள்ளனர்.

யாழ். காவல் நிலையத்தினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளின் போதே இவ்வாறு கசிப்பினை வைத்திருந்

## உதைபந்தாட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கிக்கமுனை விளையாட்டரங்கில் அரை இறுதிச் சுற்று உதைபந்தாட்டப்போட்டி இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டரங்கில் வல்வை 'ஏ' அணியினரை அத்துளு அம்பாள் அணியும், ஆதிசக்தி 'ஏ' அணியை நவசக்தி அணியும் எதிர்த்து மோதும். [யோ]

# உவர்நீரை நன்னீராக்கல் கந்தரோடையில் முயற்சி

(சுன்னாகம்)

கந்தரோடைப் பகுதியில் உவர் நீரை நன்னீராக்கும் முயற்சி குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள கிணறுகள் கொத்தணி முறையாக தெரிவு செய்யப்பட்டு உவர் நீரை நன்னீராக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதுவரை 31 கிணறுகளில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மூன்று கிணறுகளில் உவர்த்தன்மை முற்றாக நீங்கியுள்ளதாகவும் ஏனையவற்றில் உவர்த் தன்மை 60 வீதம் மாற்றமடைந்துள்ளதாகவும் இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர் இரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்தபருவமழை ஆரம்பத்துடன் இத்திட்டம் இவரால் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது ஒவ்வொரு கிணறும் 30க்கு மேற்பட்ட தடவைகள் இறைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்ற முயற்சிகள் ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்பட்டால் இன்னும் ஐந்து முதல் ஆறு ஆண்டுகளில் சகல உவர் நீரையும் நன்னீராக்க முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கந்தரோடையில் 'உவர் நீர்க் கிணறு ஆய்வு-பயனாளிகள் சங்கம்' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது இந்திட்டம் குறித்த கருத்தரங்கு ஒன்று மேற்படி சங்கத்தினரால் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ளோரை கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கத் தலைவர் த. நடராசா கேட்டுள்ளார்.

# மாபெரும் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள்

# வீதிகள் திருத்தாமையால்

மாபெரும் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள்

# 6-வது ஆண்டில் காலடி வைக்கும்

# ஈழநாதம் மக்கள் தினசரியினர்

நடாத்தும்

# மாபெரும் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள்

**காலம்: ஜனவரி 20 தொடக்கம் பெப்ரவரி 5 வரை**

★ பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்கள் ஜனவரி 5-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

★ விண்ணப்பப் படிவங்களின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள் என இடப்பட்டு, ஈழநாதம், 31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

★ **பிரவேசங்கள் யாவும் முற்றிலும் இலவசம்** ★

(போட்டிக்கான மைதானம் பின்னர் அறிவிக்கப்படும்)


யாழ். காவல் நிலையத்தினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளின் போதே இவ்வாறு கசிப்பினை வைத்திருந்தோர் அகப்பட்டனர்.

சென்ற 22-ம் திகதி கோண்டாவில் பகுதியில் விற்பனைக்கென 3லீற்றர் கசிப்பை தன்வசம் வைத்திருந்த யுவதி ஒருவரும், 23-ம்திகதி வண்ணார்பண்ணை பூநாறிமரத்தடியில் 10போத்தல்கசிப்பினை தன்வசம் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் மீதான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தமிழீழ காவல்துறையின் யாழ். பணிமனையினர் தெரிவித்தனர். (22)

## பாலர்தின விழா

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாலர் பாடசாலைகளின் பாலர் தினவிழா கடந்த 19ம் திகதி யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

ஐந்து நிகழ்வுகளில் பாலர் பாடசாலைகளுக்கிடையிலான கலைத்திறன் போட்டிகளும் தனிநாடகம், கோலாட்டம், கிராமிய நடனம் ஆகியன இடம் பெற்றன. தனிநாடகம், கோலாட்டம், கிராமியநடனம் என்பனவற்றில் கொடிகாமம் ஆங்கில மொன்றிசூரி பாலர் பாடசாலை முதலாம் இடத்தையும் பேச்சிலும் தாளலயத்திலும், கைதடி அம்பிகா பாலர் பாடசாலை முதலாம் இடத்தையும் பெற்றது. இவ் வெற்றிபெற்றபாலர் பாடசாலைகள் வெகுவிரைவில் யாழ் மாவட்ட பாலர் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளன.

(86)

## வீதிகள் திருத்தாமையால் போக்குவரத்துக்கு சிரமம்

(குருநகர்)

பல வருடங்களாக வீதிகள் திருத்தப்படாமல் இருந்து வருவதால் வீதிகளில் போக்குவரவில் ஈடுபடுவோர் சொல்லொணாச் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே பழுதடைந்துள்ள பல வீதிகள் குருநகர் பகுதியில் திருத்தப்படாமல் இருந்து வருகின்றன

குருநகர் கடற்கரை வீதி மவுண்கார்மேல் வீதி தண்ணீர்த்தாங்கி வீதி மற்றும் சென். ஜேம்ஸ் பாடசாலை வீதி. மத்திய கிழக்கு-மேற்கு வீதிகள் இவ்வாறு பல வருடங்கள் திருத்தப்படாமல் இருந்து வருவனவாகும்.

அதேவேளை மேற்படி வீதிகளுக்கு நடு நடுவாக அமைந்துள்ள மதகுகளும் சேதமடைந்திருக்கின்றன. இரவு நேரங்களில் இவற்றில் வீழ்ந்து பலர் காயமடைய நேர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## சேவைநலன் பாராட்டு

(தொல்புரம்)

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையின் விளையாட்டுக் கழகத்தினால் மேற்படி வங்கிக்கிளை முகாமையாளர் திரு. நா. விவேகானந்தனின் முப்பத்தெட்டாண்டு சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக சேவை நலன் பாராட்டு வைபவம் ஒன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி வங்கிக் கிளையின் விளையாட்டுக் கழக மூத்த உறுப்பினர் திரு. மு. சதானந்தன் தலைமையில் கடந்த வெள்ளி மாலை 4.00 மணியளவில் மானிப்பாயில் நடைபெற்ற இப் பாராட்டு வைபவத்தில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் திரு சூரியநாதன் உதவி முகாமையாளர் திரு. நாகேந்திரம் உட்பட வங்கிக்கிளையின் உத்தியோகத்தர்கள், கழக உறுப்பினர்கள் மற்றும் பலரும். கலந்து கொண்டு திரு. விவேகானந்தன் அவர்களின் 38ஆண்டு சேவையை பற்றி சிறப்புரையாற்றியும், அவரது சமய சமூக பணிகள் இந்த மண்ணிற்கு மேலும் அவசியமான தொன்றாகும் எனவும் பலராலும் வாழ்த்துரைக்கப்பட்டும், அவரது நற்சேவையை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

(41)

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

காதலித்த யுவதியை கைவிட்ட இளைஞனுக்கு யாழ். மாவட்ட நீதிமன்றில் முப்பதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த யுவதி ஒருவரை திருமணம் புரிந்து கொள்வதாக உறுதிகூறி காதலித்த கொக்குவில் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞன் திருமணம் செய்து கொள்ளமறுத்ததை அடுத்து மேற்படி நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட வழக்கின் முடிவில் இவ்விளைஞன் அதே யுவதியை திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்றும் தவறின் 30,000 ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று சுதுமலை மேற்கைச் சேர்ந்த யுவதி ஒருவரை காதலித்து பின் கைவிட்ட புத்தூர் மேற்கைச் சேர்ந்த இளைஞனுக்கு இருபதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. [22]

# சமசமாஜ, கம்யூனிசக் கட்சி இணைப்பு துரிதமாகட்டும்

- பெற்றி வீரக்கோன்

(கொழும்பு)

இலங்கை சமசமாஜக்கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றிணைவது மேலும் தாமதப்படக்கூடாது இக் கட்சிகள் இணையும் திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும். இவ்வாறு சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பெற்றி வீரக்கோன் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரதிநிதிகள் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டிலுள்ள அனைத்து சோசலிச வாதிகளும் ஒரே அணியில் திரண்டு ஒரே கட்சியாக இருப்பதே பொருத்தமுடையது. இதன் ஆரம்ப செயலாகவே இரு கட்சிகளினதும் இணைப்பு இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
23-08-1973

வீரச்சாவு
20-12-1991

திதி: 27-12-94

**கப்டன் கிர்மானி**
(துரைராஜா சிவராஜ்குமார்)
லிங்கநகர் திருகோணமலை
(செங்குந்தா் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

பூ விரிந்ததும் பூ வீழ்ந்ததும் இந்த
பூமியில் புதினமல்ல மகனே.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

கிருபாகரன் வீதி,
கல்வியங்காடு.

(10490)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
03. 03. 74

தாயக மண்ணில்
27. 12. 92

# நிலக்கீழ் கம்பிகளை திருடுவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை மற்றும் தொலைத் தொடர்பு நிலைய சுற்றாடல்களில் நிலத்திற்கடியில் புதைக்கப்பட்டிருக்கும் ஈயக் கம்பிகளை திருட்டுத் தனமாக வெட்டி எடுத்துச் செல்ல முயலும் ஏராளமானோர் காவல் துறையினரால் கைது செய்யப்படுகின்றனர்.

சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்துத் தரப்பினருமாக நூற்றுக் கணக்கானவர்கள் இதுவரை தம்மால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்த பின் விடுவிக்கப்பட்டதாகவும், தினமும் குறைந்தது பத்துப்பேராவதுமேற்படி குற்றச் செயலில்ஈடுபட்டுதம்மால் கைது செய்யப்படுவதாகவும், பொது மக்கள் இக் குற்றச் செயலில் ஈடுபடுவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தமிழீழ காவல்துறையின் யாழ்.பிராந்திய பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (22)

# புடவைக் கடையில் திருட்டு முயற்சி

(யாழ்ப்பாணம்)

புடவைக் கடையில் இருந்து சுமார் ஆயிரத்தி ஐநூறு ரூபா பெறுமதியான துணியை திருட்டுத் தனமாக எடுத்துச் சென்ற நபர் ஒருவர் கடைக்காரரினால் மடக்கப்பட்டார்.

கடந்த சனி பிற்பகல் யாழ் நகர் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ். மேஜர் சோதியா தெருவில் உள்ள புடவை விற்பனை நிலையம் ஒன்றில் விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த 'துணிச் சுருள்' ஒன்றை திருட்டுத்தனமாக எடுத்த பிரஸ்தாப நபர் அதனை சாரத்தினுள் போட்டுக் கொண்டு செம்மாதெரு வழியாக ஓடமுற்பட்ட போது அயல் கடைக்கார இளைஞர் சிலரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். (22)

# பாய் வகைகளின் ஏற்றுமதி திணைக்களம் முயற்சி

(கொழும்பு)

பாய் வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியில் கிராம அபிவிருத்தி திணைக்களம் ஈடுபட்டுள்ளது அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமப்புறங்களில் சுயதொழிலாக மேற்கொள்ளப்படும் பாய் உற்பத்தியின் மூலம் பெருமளவு பாய்கள் கிடைப்பதாகவும், இவை உள்ளூர் தேவைகளை விட மேலதிகமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இப்பாய்களை சலுசல நிறுவனம் கொள்வனவு செய்ய முன்வந்திருப்பதுடன், தனியார் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யவும் முயற்சிசெய்யப்படுகிறது.

# பிக்பொக்கட் பேர்வழிகள் 30பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பில் பெரும் அளவிலான மக்கள் வந்து கூடும் காரணத்தால் பிக்பொக்கட் பேர்வழிகளின் தொல்லைகள் அதிகரித்து இருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த ஐந்து தினங்களில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட பிக்பொக்கட் பேர்வழிகள் கோட்டை மற்றும் புறக்கோட்டை பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர்.

இத்தகைய பிக்பொக்கட் பேர்வழிகளை கண்டு பிடிப்பதற்காகவும் கைது செய்வதற்காகவும் பொலிசார்சாதாரண உடையில் கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர் சேவை மன்றம் வடக்கில் புனரமைக்க முடிவு

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிகளை வடக்கு- கிழக்கு மாகாணங்களிலும் புனரமைப்பு செய்யும்படி இளைஞர் விவகார விளையாட்டுத் துறை, கிராம அபிவிருத்தித் துறைப் பிரதி அமைச்சர் ... ளார்.

ஏற்கனவே சேவையிலிருந்த அதிகாரிகளை மீண்டும் இணைக்குமாறும், யுத்தம் காரணமாக தொழிலை இழந்திருக்கும் அதிகாரிகளை மீண்டும் வேலைக்கு அழைக்குமாறும் அவர் பணிப்புரை

# தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் செல்ல இலங்கையருக்கு அழைப்பு இல்லை

## தமிழியலாளர்கள் கவலை

(கொழும்பு)

தஞ்சாவூரில் நடைபெறவுள்ள எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கையின் தமிழியல் அறிஞர்களுக்கு கதவடைப்புசெய்யப்பட்டிருப்பது தமிழாராய்ச்சி மாநாட்டின் நோக்கங்களுக்கே முரணான செயல் ஆகும். இவ்வாறு இலங்கைத் தமிழியல் அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இக் கதவடைப்பின் மூலம் தமிழியல் அறிஞர்கள் தமது ஆய்வு முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படை நோக்கத்திற்கு ஊறு விளைவிக்கப்பட்டு இருப்பதாகவும், இதனால் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அதன் பொலிவையே இழந்துவிட்டது எனவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான இறுதி அழைப்பு கிடைக்கும் என்று சிங்கள அறிஞர்கள் உட்பட நூற்றுக் கணக்கான இலங்கை அறிஞர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் அவர்கள் பயணம் செய்வதற்காக தனி விமானம் ஒன்றுகூடப் பெறப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வேளையில், இறுதி அழைப்புக் கிடைக்காமையால் பயணம் ரத்துச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# இலங்கை பேராளர்களுக்கு தனி விமானம் ஏற்பாடு?

(கொழும்பு)

எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை பேராளர்களுக்கு வசதி செய்யும் முகமாக 31. 12. 94-ல் திருச்சிக்கு தனிவிமானம் ஒதுக்கித் தரும்படி தவத்திரு. தனிநாயகம் அடிகளார் நம்பிக்கை நிதிய செயலாளர் ஆ. தேவராசன், சபாநாயகர் கே, பி. இரத்நாயக்க மூலம் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி இதற்காக ஆவன செய்யும்படி எயர்லங்கா நிறுவன பணிப்பாளர் சேபால ஆட்டிகலவுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

எனினும் இறுதி அழைப்புக் கிடைக்காமையால் பயணிகளின் பட்டியலை பூர்த்தி செய்யமுடியவில்லை என்றும், இதனால் தனிவிமானம் பெறுவது சாத்தியமற்றும் போகலாம் என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாதுரு ஓயா திட்டத்தின் கீழ் 14,000 குடும்பங்கள் குடியேறும்

- கேணல் அநுருத்த ரத்வத்த

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மாதுரு ஓயாத் திட்டத்தின் மேற்கு கரையில் குடியேற்றங்கள் மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளது. இக் குடியேற்றங்கள் எதிர்வரும் மூன்று மாத காலத்தினுள் ஆரம்பமாகும் எனவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இத் திட்டத்தின் கீழ் சுமார் 14,000 குடும்பங்கள் குடியமர்த்தப்படும். இதில் மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மாவட்ட சனத் தொகையின் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப இக் குடியேற்றத் திற்கான குடும்பங்கள் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டரை ஏக்கர் வயல்காணியும், வீடு மற்றும் சிறு பயிர்ச் செய்கைக்கென அரை ஏக்கர் காணியும், ஒதுக்கப்படும். இத் திட்டத்திற்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் பொறுப்பு ஏற்கும் எனவும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் மூழ்கிய டாறா இந்தியருக்குரியது

(கொழும்பு)

சரக்குக் கப்பலான டாறா முல்லைத்தீவுக்கு அருகே கடலில் மூழ்கத் தொடங்கிய போது, மற்றுமொரு சரக்குக் கப்பலான நரோமா அருகில் சென்று கொண்டிருந்தது எனவும், நரோமா கப்பலின் உதவியினாலேயே டாறாவில் இருந்தோர் உயிர்தப்ப முடிந்தது எனவும் நம்பகரமாகத் தெரியவருகிறது.

இது வரையில் டாறா கப்பல் மூழ்கியமைக்கான காரணம் எதுவும் வெளியிடப் படவில்லை. இக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவது தொடர்பான ஒழுங்குகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் செய்திருந்தார் இதனால் அவர் விசாரணைக்கு உள்ளாக நேரிடலாம் எனவும் கூறப்படுகிறது.

# கல்முனை தமிழ் கிராமங்கள் அபிவிருத்தியில் புறக்கணிப்பு



## 2-ம் லெப். கதிர்

### (ஞானகுருபரன் சுதர்சன்)

கதிரென எழுந்து கள ஒளி தந்து
கனன்று எதிரியின் கர்வம் தகர்த்து
புதிராய் அவர்க்குப் புகட்டினை பாடம்
புலிகள் எழுந்தால் புவியது நடுங்கும்
ஈராண்டு நந்நாள் நினைவு
சீர்பெற்றோங்கும் திருநாள் இன்று
உன்னை நினைத்து உள்ளம் உருகி
கண்ணில் ஒற்றிக் கசிந்தோம் ஐய.

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்

வ. செல்லத்துரை (பேரன்)
மற்றும் குடும்பத்தினர்.

(10466)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



27.12.94

### செல்வி சீதாலக்ஷ்மி செல்லையா

(இளைப்பாறிய தபால் அதிபர், உயர் திரு. நா. செல்லையாவின் அன்பு மகள்)

எங்கள் அன்பு சகோதரியே! நீர் எம்மை விட்டு பிரிந்து 3 ஆண்டுகளாயினும், உமது அன்பு நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது.

எங்கள் உள்ளத்தில் என்றும் ஒளி வீசும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கும்,

உமது அன்பு
சகோதரர்கள், சகோதரிகள்,
அண்ணி, மருமகள்,

''லச்சுமி கிரி''
கனகசபை றோட்,
மானிப்பாய். (சி-11016)

அபிவிருத்தித் துறைப் பிரதி அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க வலியுறுத்தியுள் மீண்டும் வேலைக்கு அழைக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

# ஆசிரியர் இடமாற்றத்திற்கு மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(செங்கடகல)

தமது பாடசாலையில் கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களையும் உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு கோரி தமிழ் பாடசாலை ஒன்றின் மாணவர்கள் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்துள்ளனர்.

பன்வில பிரதேசத்தில் அமைந்துள்ள தமிழ் வித்தியாலயம் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இப்பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் 500 மாணவ, மாணவியர் இவ்வாறு தமது வகுப்புகளை பகிஷ்கரித்தனர். அனைத்து ஆசிரிய, ஆசிரியைகளையும் இடமாற்றுமாறு கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த வேளை பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள் சிலரை மாணவர்கள் கற்களால் வீசித் தாக்கியதாகவும் தெரியவருகிறது.

ஆசிரியர்களுக்கு எதிராக பல சுலோகங்களும், சுவரொட்டிகளும் பாடசாலை வளவில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாணவர்களின் நடவடிக்கைகள் காரணமாக மேற்குறிப்பிட்ட பாடசாலை ஆசிரியர்கள் பன்வில பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததுடன் இரண்டு மூன்று தினங்கள் நிலையத்திலேயே தங்கள் கடமை நேரத்தை கழித்ததாகவும்தெரிவிக்கப்படுகிறது.

பன்வில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் இப்பிரதேச உதவி கல்வி அதிகாரியும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு சென்றபோது பாடசாலை வளவில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனராம். பின்னர் உதவி கல்வியதிகாரி பாடசாலை குறிப்பு புத்தகத்தில் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக பதிவு செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களால் கண்டி பிரதிக் கல்விப்பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் நின்ற கப்பல் புலிகளுக்குசொந்தமானதா

## கடற்படையினர் சந்தேகம்

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டு இருந்த 1000 தொன் எடையுள்ள கப்பல் ஒன்றை விடுதலைப்புலிகளுக்கு சொந்தமானதாக இருக்கலாம் எனக் கடற்படையினர் சந்தேகித்து உள்ளனர்.

இதைத் தொடர்ந்து இக்கப்பலை அண்மித்த கடற்படையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். அப்போது கப்பலின் தலைவர், முகவரினால் தான் அனுப்பப்பட்டதாகவும், அவரது அடுத்த ஆணைக்கு காத்திருப்பதாகவும் தெரிவித்ததையடுத்து கடற்படையினர் விலகிச் சென்றதாக கூறப்படுகிறது.

### முன்னைய அரசால் கோரப்பட்ட

# கேள்விப்பத்திரங்கள் ரத்து அரசாங்கம் அறிவிப்பு

முன்னைய அரசினால் கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களில் சுமார் இருநூறு வரை இந்த அரசினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

முன்னைய பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அமைச்சரவை அங்கீகாரத்துடன் கோரப்பட்ட சுமார் இருநூறு கேள்விப்பத்திரங்கள் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளன. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் காபந்து அரசு ஒன்றினால் இவ்வளவு தொகையான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டது இதுவே முதல்முறையாகும் மேலும்,நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நடந்த அமைச்சரவைக் கூட்டங்களில் பல உயர் பதவிகள் நிரப்பப்பட்டது எனவும், காணிகளை குத்தகைக்கு விடுதல் போன்ற தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டது எனவும், இவைபற்றி ஆராய அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# அபிவிருத்தியில் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

கல்முனைப் பகுதியிலுள்ள தமிழ் கிராமங்களின் அபிவிருத்தி நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. இது பற்றி அங்குள்ள தொண்டர் நிறுவனங்கள் மேலும் கூறுகையில் கல்முனையிலுள்ள முதலாம் குறிச்சி, இரண்டாம் குறிச்சி, மூன்றாம் குறிச்சி போன்ற தமிழ்க் கிராமங்களில் அபிவிருத்திப் பணிகள் எதுவும் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை.

மேற்படி கிராமங்களின் உள்வீதிகள் அனைத்தும் குண்டும் குழியுமாகக் காட்சி தருகிறது. கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இப் பகுதி கிராமங்கள் பெரும் பாதிப்புகளுக்கு இலக்கானது தெரிந்ததே.

நோட்டலாம் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை மூழ்கிய டாறா என்ற கப்பல் இந்தியர்களுக்கு சொந்தமானது எனவும், இந்தியாவின் தேசியக் கொடியே இதில் பறந்து கொண்டிருந்தது எனவும் கூறப்படுகிறது.


CSA

கணனி வகுப்புக்கள்

*Data Processing & BASIC Programming*

7 மாத கால வகுப்புகள்

ஆரம்பம்: 28.12.94

காலை 8.30 மணி

பல்கலைக்கழகம் புக இருப்பவர்களுக்கு ஏற்றது.

COMPUTER SCIENCE ACADEMY
Navalady Lane, Thiruneively.

(சி-11017)


## அறிவித்தல்

### கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

### கிளைக்குழுத் தேர்தல் - 1994

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் 23 கிளைகளுக்கான கிளைக்குழுத் தெரிவுக்கான வேட்புமனுக்கள் 31.12.94-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் அவ்வக்கிளை நிலையங்களில் உதவித் தேர்தல் அலுவலர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் அக்கறை உள்ளோர் தமது கிளை நிலையங்களில் ரூபா 10/-ஐ செலுத்தி வேட்புமனுக்களைப் பெற்று, பூரணப்படுத்திச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திரு. சி. கிருஷ்ணர்
தேர்தல் அலுவலர்
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி.

பிரதேசசெயலகம்,
கரவெட்டி.

(சி-10995)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சமாதான சூழல் உருவாவதில் பெரும் பொறுப்பு அரசின் பக்கமே

சமாதான சூழல் ஏற்பட வேண்டும். மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோன்றவேண்டும், அன்றாட அலுவல்கள் தொந்தரவுகளுக்கு உட்படாமல் சுமுகமாக வாழக்கூடிய உகந்த சூழல் உருவாகவேண்டும். இவை எல்லோருக்கும் பொதுவான விருப்பங்கள்தான். ஆனால் இத்தகைய சமாதான சூழல் ஏன் இன்றில்லாமற் போயிற்று? எவ்வாறுஇது இல்லாமல் நீடிக்கின்றது? சமாதான மான-இயல்பான சூழ்நிலை தோன்றுவதில் முட்டுக்கட்டையாக இருக்கும் விடயங்கள் என்ன? இந்தக் கேள்விகள் இப்போது உரத்துக் கேட்கப்பட வேண்டியவையாக உள்ளன.

சமாதானப் பேச்சுக்களை ஊக்குவிக்கக்கூடியஉகந்த சூழ்நிலை உருவாகுவதை நோக்கமாகக்கொண்டு எட்டுப்பேர் கொண்ட குழுவொன்றை சிறிலங்கா அரசாங்கம் அமைத்திருக்கும் நிலை இதனை மேலும் அவசியமாக்குகின்றது என்றால் மிகையானதல்ல. ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் பொறுப்பில் இருக்கும் இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயினால் இக்குழு அமைக்கப்பட்டிருப்பது முக்கியமான ஒரு விடயமாகும். சட்டத்தரணி கு. விநோதன் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இக்குழு சமாதானத்தின்தேவைகளைமக்களுக்கு எடுத்துக்கூறும் எனவும், அதற்காக கருத்தரங்குகள் நடத்தும் எனவும் மேலும் கூறப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. எனவே தான் சமாதான சூழல்-இயல்பு வாழ்வு ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதற்குரிய காரணிகள் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியது அவசியமாகின்றது.

## மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலை

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை எண்ணிப்பார்ப்பது இங்கு தேவையானதே. சிறிலங்கா இராணுவம் தனதுகட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதாக கூறிக்கொள்ளும் திருகோணமலை மாவட்டத்தின் நிலையை இங்கு சுட்டிக்காட்டுவது ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பது போல இருக்கும். இங்கு காலத்திற்கு காலம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக தமிழ் மக்கள் தங்கள் சொத்துக்கள், வீடு, வளவுகள் என்பவற்றை இழந்து அகதி முகாம்களில் வாழும் நிலை கண்கூடானது. சீனன் குடாவிலுள்ள கிளப்பன் பேர்க் பகுதியில் இருக்கும் முன்னாள் நெற்களஞ்சிய சாலை அகதி முகாமாக மாறி பல ஆண்டுகள் உருண்டோடி விட்டது. உடுதுணிகளால் திரை மறைப்புக்களை உருவாக்கி ஒரு சமுதாயமே அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அரசு தரும் நிவாரணத்தை மட்டுமே நம்பி வாழ்க்கையை நகர்த்த வேண்டிய நிலைக்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு நீண்ட காலமாகி விட்டது, இது தவிர தம்பலகாமம், நிலாவெளி, மூதூர் போன்ற பகுதிகளிலும் அகதி முகாம்களில் தமிழ் மக்களின் அவல வாழ்க்கைஇரத்தக்கண்ணீரை வரவைப்பதாக இருக்கிறது என இம்முகாம்களுக்கு நேரில் விஜயம் செய்தவர்கள் கூறும் கதையாகவுள்ளது. மழையால் நனைந்தும் வெயிலால் உலர்ந்து வாழும் இந்த மக்களை தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்வதற்கு முட்டுக் கட்டையான சக்தி எது? இந்தக் கேள்விக்கான விடை சிறிலங்கா இராணுவம் என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? பாதுகாப்பு படையினர் கூறும் பாதுகாப்பு காரணங்கள் தான் இந்த மக்களின் இயல்பு வாழ்வுக்கான தடைக்கல்லாக இருக்கிறது என்பதைக் கண்டு கொள்வதற்கு பெரிய அரசியல் ஞானம் எதுவும் வேண்டியதில்லை.

இராணுவத்தினர் தமது பூரண கட்டுப்பாட்டினுள் இருப்பதாகக் கூறும் பிரதேசத்தில் தமிழ் மக்களின் வாழ்க்கை இப்படியாக இருக்கிறது என்றால் ஏனைய பகுதிகளின் நிலை என்ன என்பதையும் எண்ணிப்பார்க்கலாம். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத பிரதேசங்களுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லகட்டுப்பாடு- 28பொருட்கள் மீதான தடையுத்தரவு நீக்கப்பட்டு விட்டதாக கொழும்பில் சொல்லப்பட்டாலும் அப் பொருட்கள் தாண்டிக் குளத்தை தாண்டுவது சங்கடமாகவே இருக்கிறது. பற்றரிகள்கொண்டுவந்தால் கண்ணிவெடிக்கு பயன்படுத்திவிடுவார்கள் என்றும்,சீமெந்து கொண்டு வந்தால் பதுங்குகுழி கட்டிவிடுவார்கள் என்றும், இவ்வாறு ஒவ்வொரு பொருளுக்கும் ஏதாவதொரு காரணம் கூறித்தடுத்துக்கொண்டு இருக்கும் நிலையில் இயல்பு வாழ்க்கை எப்படித் திரும்பக் கூடும்?

தமிழர்கள் தமது தாயகப் பகுதிகளுக்குள் தானும் சுதந்திரமாக நடமாடுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், படையெடுப்பு அச்சுறுத்தல்களை உணர்த்தும் வகையிலும், குடாநாட்டின் கழுத்தை நெரிப்பதுபோல குந்தியிருப்பது யார்? இதன் மூலம் மக்களின் அன்றாட- நாளாந்தக் கடமைகளுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக விளங்கும் சக்தி எது? இவற்றை எண்ணிப்பார்க்கும் போது இயல்பு வாழ்க்கை ஏற்படுவதிலுள்ள முட்டுக்கட்டைகள் தெற்றெனப் புலனாகும்.

## சொல்லிக்கொண்டு இருப்பதால்…

செயலில் காட்ட வேண்டிய ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பதால் மட்டும் பயன் விளைந்து விடப்போவதில்லை என்பது தெளிவு. சமாதானம் தேவை.இயல்பு நிலை உருவாக வேண்டும் என்றால் அதற்கான முட்டுக்கட்டைகளை இனங்கண்டு அத்தடைக்கற்களை நீக்க வேண்டும். இது விடயத்தில் அரசின் பக்கமே பெரும் பொறுப்பு உள்ளது. அரசு நிறைவேற்ற வேண்டிய கடமைகளே் அநேகம். தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவும், கடமைகளை நிறைவேற்றுவதை தவிர்க்கவும் அரசு முற்பட்டுள்ளதோ என்ற சந்தேகத்தையே தேசிய இன ஒருமைப்பாட்டு அமைச்சு அமைத்திருக்கும் குழு தோற்றுவிக்கின்றது.

மக்களுக்கு சமாதானம் தோன்றுவதிலும், இயல்பு நிலை உருவாகுவதிலும் ஆர்வம்இல்லைஎன்பதுபோலவும். இத்தகைய விடயங்களில் விழிப்புணர்ச்சியை ஊட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது போலவும் தான் அரசின் இச் செயற்பாடு அமைந்துள்ளது. ஆனால் உண்மை நிலை இதற்கு மாறானது. மக்கள் சமாதானத்தின் பாலுள்ள ஆர்வத்தின் காரணமாகவும், மாற்றம் ஒன்று ஏற்படுவதை வேண்டி விரும்பியும் தான் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சியில் அமர்த்தியிருப்பதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். எனவே தான் சமாதானத்தை வலியுறுத்தும் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் பேசப்பட இருக்கின்றவற்றை அதிகமாக செயலில் காட்ட வேண்டியநிலை இருக்கின்றது

மேலும் சமாதான சூழல் உருவாக்குவதை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழுவிற்கு தமிழரான விநோதன் தலைவராக்கப் பட்டிருப்பது இன்னுமொரு விநோதமே. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கான உடுவில் தொகுதி அமைப்பாளராக இரு தசாப்தங்களுக்கு முன்னர் தமிழர்கள் மத்தியில் அறிமுகமாகிய விநோதன் இப்போது மீண்டும் புதுப்பிறப்பு எடுத்திருப்பது ஒருபுறம். இவர் தமிழர்களது தேசிய அபிலாசைகளை பிரதிபலிப்பவராக இருப்பாரா அல்லது தமிழர்களின் பிரதிநிதியாக கருதப்படத்தக்கவரா என்பது இன்னுமொரு புறம். ஆனால் விநோதனை தேடிப்பிடித்து தலைவராக்கியது மூலம் அரசு உணர்த்தும் செய்தி என்ன என்பது மற்றுமொருபுறம்.

விநோதனின் நியமனத்தின் மூலம் சமாதானத்தின் எதிரிகளாக தமிழர்களைக் காட்ட அரசு முற்படுகிறது என்பதும், தமிழர்கள் மத்தியில் தமது ஏஜெண்டுகளை உருவாக்கி அதன் மூலம் அரசியல் நடத்தவே அரசு எண்ணம் கொண்டுள்ளது என்பதும்,அபிவிருத்தியைக் காட்டி அரசியல் உரிமைகளை மறுதலிக்க அரசு எத்தனிக்கிறதோ என்பதும், சொல்லப்படாத செய்திகளாக கேள்விக்குறிகளை எழுப்புகின்றது.

## இளையவன்

---

## சிந்தனைக்கு..

உபதேசம் என்பது மணல் மேல் எழுதிய அறிவுரை.
முன்மாதிரி என்பது பாறையின் மேல் பொறித்தது.
அப்படிப்பினை விரைவில் அழியாது.

- வில்லியம் சேனிங்.

---


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்-05


# கொலைகாரனுக்கல்ல கத்திக்குத் தண்டனை

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது போல் யாரால் புறக்கணிக்கப்பட்டாலும் ஜனாதிபதி யாப்பு ஆட்சிமுறை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிற்குப் பிள்ளை போன்றதே. ஏனெனில் அதன் தந்தையும் அவரே. தாயும் அவரே. அது அவருக்கான, அவரால் உருவாக்கப்பட்ட அமைப்புமாகும்.

இந்த நிலையிலேயே ஜே. ஆர். ஜெயவர்த்தனா, அவ்வரசியல் அமைப்பை நீக்கிவிட எடுக்கப்படும் முயற்சிக்கு எதிராகச் செயற்படுவதாகத் தெரிகின்றது. அதாவது தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்க எடுக்கும் நடவடிக்கைகளை எவ்வாறு முறியடிப்பது என ஐ.தே.க. எம்.பிகளுக்கு உபதேசம் செய்து வருகின்றார்.

ஆனால் இவ் அரசியல் யாப்பை சிங்கள மக்கள் நிராகரித்துள்ளார்கள். இதற்கு இவ் அரசியல் யாப்பின் கீழ் சுமார் 15 வருடங்களுக்கு மேல் ஐ.தே.க. நடத்திய அராஜகமே அவர்கள் அவ் அரசியல்யாப்பை நிராகரித்தமைக்குக் காரணமாகும்.

ஆனால் இது ஜனாதிபதி அரசியல் யாப்பில் இருந்த முற்று முழுதான தவறினால்ஏற்பட்டதா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். சாதாரணமாக சகல அரசியல் யாப்பிலும் உள்ளது போன்றே குறை நிறைகளை இவ் அரசியல் யாப்பும் கொண்டிருந்தது. ஆனால் இதிலிருந்த விசேட அம்சம் என்னவென்றால் சர்வாதிகாரியை உருவாக்குவதற்கு அது துணைபுரிகின்றது என்பதே.

ஆனால் இது யாருடைய தவறு? ஜே.ஆர். ஜெயவர்த்தனா தனக்காகவே உருவாக்கிய இவ் அரசியல் யாப்பில், தன்னை ஒரு சர்வதிகாரியாக உருவாவதற்கு வழியை தானே ஏற்படுத்தியிருந்தார். அதன் வழியாக தான் சர்வதிகாரியாகவும் உருவாகி இருந்தார். அதாவது தனது அரசியல் குறிக்கோளை ஜே.ஆர். ஜெயவர்த்தனா புதிய அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கிக் கொண்டார்.

அதன் பின்னர் வந்த ஐ. தே. க. தலைவர்களும்

---

ஸெயில் சிங்கின் பூதவுடல்

# பூரண அரச மரியாதையுடன் இன்று நல்லடக்கம்

(டில்லி)

சண்டிகார் அரச மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலமான முன்னாள் குடி…

…றுக்காலை சண்டிகாரிலுள்ள அரச விருந்தினர் மாளிகையிலிருந்து விமானப்படையின் தனிவிமானத்தில் புதுடில்லி

# ஜெருசலேமில் குண்டு வெடிப்பு

(ஜெருசலேம்)

மேற்கு ஜெருசலேமின் பஸ் நிலையமொன்றில் கமாஸ் இயக்க தீவிரவாதி ஒருவரின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு ஒருவர் கொல்லப் பட்டதுடன், மற்றும்

# ஸெயில் சிங் மறைவுக்கு ஒருவார துக்கம் பிரகடனம்

முன்னாள் குடியரசுத்தலைவர் கியானி ஸெயில்சிங்கின் மறைவைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் ஒருவாரம்…

…விழாக்கள், வைபவங்கள் அனைத்தும் ரத்துச்செய்யப் படுவது தெரிந்ததே. முக்கிய தலைவர்கள் பலரும் அமரர்

தனி புதிய அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கிக் கொண்டார்.

அதன் பின்னர் வந்த ஐ. தே. க. தலைவர்களும் ஜே. ஆர். பின்பற்றிய வழியை பின் பற்றினர். ஆனால், ஜே. ஆரைவிட பெரும் சர்வாதிகாரிகளாக அவர்கள் உருவானார்கள். ஆனால் இதற்கும் ஜே. ஆர். உருவாக்கிவிட்டுச் சென்ற அரசியல் இராணுவ, பொருளாதார நெருக்கடிகளே காரணமாயின.

ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் பின்வந்தவர்களுக்கும் இடையில்உள்ள பிரதானமான வேறுபாடாக இருந்தது என்னவென்றால், ஜே. ஆர். இனவாத நோக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்திய சகல வழிமுறைகளையும் சிங்களவர்களுக்கும் எதிராக அவர்கள் பயன்படுத்தியமை தான். இதன் பின்பே ஜனாதிபதி ஆட்சிமுறைக்குஎதிராக சிறிலங்காவில்பெரும்குரல் எழும்பியது.

அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறை உருவாகி சுமார் பத்து வருடங்கள் வரை அதாவது 1987 வரையில் சிங்கள மக்களோ அன்றி சிங்கள அரசியல்வாதிகளோ அதற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை. இந்நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறையால் தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட போதும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை. ஆனால் இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் பின்னர் சிங்களவர்களுக்கு எதிராக அவை பயன்படுத்தப்பட்ட போதே, அரசியல் யாப்பிற்கு எதிராகக்குரல் எழும்பியது. ஜே. ஆர். காட்டிய வழியில் வந்தவர்களின் சர்வாதிகாரத்தினால் சிறிலங்காவில் இரத்த ஆறு ஓடியது.

ஆனால், இது தனியாக ஜனாதிபதி ஆட்சிமுறையில் மட்டும் தான் நடைபெற முடியுமா? அவ்வாறானால், 1970-1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாராளுமன்ற ஆட்சிமுறை இருந்த போது சுமார் 15,000 சிங்கள இளைஞர்களும் /யுவதிகளும் கொல்லப்பட்டமைக்கு அவ் அரசியல் அமைப்புக்களைக் குறை கூற முடியுமா? இந்தவகையில் அரசியல் யாப்புக்கள் அரசாங்கம் புரியும் கொலைகளுக்குக் காரணமாவதில்லை. ஆட்சியில் இருப்பவர்களின் அபிலாசைகள், தீர்மானங்கள் என்பனவே கொலைகளுக்கும் அராஜகத்திற்கும் காரணமாகின்றன. ஆனால் ஜனாதிபதி ஆட்சிமுறையானது, பாராளுமன்ற ஆட்சிமுறையை விட சற்று அதிகமான வசதி வாய்ப்புக்களைக் கொலைகளுக்கும், அராஜகத்திற்கும் வழங்கியது என்பதே உண்மையாகும்.

இந்நிலையில் புதிய அரசாங்கம் எடுக்கும் முயற்சியானது, கொலைக்குக் காரணமானவர்களை விட்டுவிட்டு கொலைக்கான கருவியை தூக்கு மேடையில் ஏற்றுவது போன்றாகும். இதேசமயம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா எடுக்கும் முயற்சியானது அது கருவியானாலும் தனது பிள்ளை போன்றது என்பதினால் ஆகும்.

(டில்லி)

சண்டிகார் அரச மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலமான முன்னாள் குடியரசுத்தலைவர் கியானி ஸெயில்சிங்கின் பூதவுடல் இன்று பூரண அரச மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. நேற்றுக்காலை சண்டிகாரிலுள்ள அரச விருந்தினர் மாளிகையிலிருந்து விமானப்படையின் தனிவிமானத்தில் புதுடில்லிக்குகொண்டு வரப்பட்டபூதவுடல், புதுடில்லி சாணக்கிய புரியிலுள்ள அவரது வீட்டில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

# கடலில் படகு கவிழ்ந்து தமிழக மீனவர்கள் பலி

(சென்னை)

கன்னியாகுமரிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் மூன்று மீனவர்கள் பலியாகியுள்ளனர். நேற்று முன்தினம் கன்னியாகுமரிக் கடலில் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: படகு நீரில் மூழ்கி கவிழ்ந்ததாகவும் அப்போது அதிலிருந்த ஆறு மீனவர்களும் நீரில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் வேறு ஒரு படகில் வந்தவர்களால் மூவர் காப்பாற்றப்பட்டதாகவும் மற்றும் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் காவல் துறையினர் கூறியுள்ளனர். காப்பாற்றப்பட்ட மூன்று மீனவர்களும் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# 15 வீதமான அமெரிக்கர் வறுமையில் வாழ்கின்றனர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சனத்தொகையில் 15 வீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவருவதாக அமெரிக்க தொழிலமைச்சின் செயலாளர் றொபேட்றிச் தெரிவித்துள்ளார். இவர்களது வருமானம் 14,763 (டொலர்) 7,22,353 ரூபாய், ஆண்டொன்றுக்கு.

அமெரிக்க மக்கள் வரவர சோம்பேறிகளாக மாறிவருவதாகவும் இவர் கூறியுள்ளார். அமெரிக்காவில் கடந்த ஆண்டு வேலையற்றோர் தொகை 5.9 சத வீதமாகக் காணப்பட்டதாகவும் இவர் கூறியுள்ளார். (27)

# அரபு கிராமங்களிலிருந்து இஸ்ரேலிய படை வாபஸ்

(டெல்அவிவ்)

ஜெருசலேமுக்கு அருகாமையிலுள்ள இரு கிராமப் பகுதிகளில் இருந்து துருப்புக்களை விலக்கிக் கொண்டிருப்பதாக இஸ்ரேலிய அரசு அறிவித்துள்ளது. அபூசரிப், அபூசாரியா ஆகிய இக் கிராமங்களிலிருந்து இஸ்ரேலிய துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படுவதைத் தொடர்ந்து மேற்குக் கரைப் பகுதியின் தலைமையகமாக இவ்விரு கிராமங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க தீர்மானித்து இருப்பதாக பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கூறியுள்ளார்.

இதேவேளை இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீன் அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்து அதனை விரிவுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நிலையமொன்றில் கமாஸ் இயக்க தீவிரவாதி ஒருவரின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 12- 27**

**செவ்வாய் இரவு**

08.01 - ஊர்சுற்றும் ஒலி வாங்கி

08.10 - அறிந்து கொள்ளுங்கள்-தகவற்களஞ்சியம்.

08.20 - நலந்தானா-நிகழ்ச்சியில் ''கண் தானம்'' பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்

08.30 - செய்திகள்

08.40 - கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''மோசடி''

08.50 - களமும் கானமும்- பாலா எழுதிய ''மறக்க முடியவில்லை''

09.00 மணிக்கு இரவுநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**19)4-12-28**

**புதன் காலை**

07.02 - மாவீரவணக்கம்

07.15 - நீங்கள் கேட்டவை

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07 40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

முன்னாள் குடியரசுத்தலைவர் கியானி ஸெயில்சிங்கின் மறைவைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் ஒருவாரம் துக்கம் கொண்டாடப்படுகிறது. இந்நாட்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுவதுடன் அரச விழாக்கள், வைபவங்கள் அனைத்தும் ரத்துச்செய்யப்படுவது தெரிந்ததே. முக்கிய தலைவர்கள் பலரும் அமரர் கியானி ஸெயில் சிங்கின் மறைவு தொடர்பாக அனுதாபச் செய்திகளை வெளியிட்டனர்.

# செசன்ய தலைநகர் மீது ரஷ்ய படை குண்டு வீச்சு

(குரோஸ்னி)

செசன்யத் தலைநகர் குரோஸ்னி மீது ரஷ்யப்படையினர் மீண்டும் குண்டுவீச்சு தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர். அந்நகரின் வடமேற்கு பகுதியில் பெரும் தீ காணப்பட்டதாகவும், போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது. எனினும் ரஷ்யத் துருப்புக்களின் முன்னேற்றத்தை தடுக்கும் விதத்தில் செசன்ய கிளர்ச்சியாளர்கள் கடுமையான பதில்தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக பி. பி. சி செய்தி கூறுகிறது. செசன்யப்படையினரில் சுமார் 1000 பேர் வரை உயிரிழந்து போயிருப்பதாகவும் தெரியவருகிறது.

# யூதர்கள் குடிவருகை இஸ்ரேலில் அதிகரிப்பு

(டெல் அவிவ்)

முன்னாள் சோவியத் யூனியனில் வாழ்ந்து வந்த சுமார் 78,000 இஸ்ரேலியர்கள் இம்மாத இறுதிக்குள்ளாக மீண்டும் இஸ்ரேல் திரும்பக்கூடும். இவ்வாறு இஸ்ரேலில் இருக்கும் யூத குடியுரிமைத் துறை கூறியுள்ளது. அது மேலும் குறிப்பிடுகையில், இம்மாத ஆரம்பம்முதல் சுமார்75,000க்கும் அதிகமானயூதர்கள்இஸ்ரேலில்குடி புகஆரம்பித்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.

# கோவேறு கழுதைகளில் ஐக்கிய நாட்டுபடையினர்

பொஸ்னியாவில் சேர்பியர்கள் விதித்த எண்ணெய் விநியோகத் தடையினால் ஐக்கிய நாட்டுப் படைகள் தமது நிலைகளுக்கு வீரர்களை அனுப்புவதற்கு கோவேறு கழுதைகளைப் பயன்படுத்துகின்றனர்.

மேலும், ஐ. நா. படைஅதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், கோவேறு கழுதைகள் மூலம் வீரர்களை 13 கண்காணிப்பு நிலைகளுக்கு அனுப்புவதற்கும் அத்தியாவசிய பொருட்களாகிய பற்றரி மற்றும் பொருட்களை துவிச்சக்கர வண்டி மூலமும் இலகுவாக அனுப்புவதனால் தமக்கு பாதுகாப்பும் உற்சாகமும் உள்ளதாக தெரிவித்துள்ளார்

## மண்ணெய்யுடன் மாகோ

8000 பரல் மண்ணெய்யுடனும் சீமெந்துடனும் இம்மாதம் 29-ம் திகதி 'மாகோ' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தடையுமென எதிர் பார்க்கப்படுகிறது.

இக்கப்பல் கடந்த ஞாயிறன்று பிற்பகல் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டு விட்டதாக அறியவருகிறது.
(யோ)

## கலந்துரையாடல்

சகல ப.நோ.கூ. சங்க தலைவர்/பொதுமுகாமையாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சபையின் உப தலைவர் திரு. சா. செல்வரட்ணம் தலைமையில் யா. மா. கூ. சபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## தீவிபத்தில் மூதாட்டி மரணம்

[தென்மராட்சி]

இரவில் வளவினுள் இருந்த கிடங்கில் விளக்குடன் தவறுதலாக விழுந்த மூதாட்டி கருகி மரணமானார்.

கடந்த சனியன்று இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மீசாலை கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் அன்னப்பிள்ளை [வயது 73] என்ற மூதாட்டி இரவு வீட்டுக்கு வெளியே கையில் விளக்குடன் சென்று கொண்டிருந்த போது மலசலகூடம் கட்டுவதற்காக வெட்டப்பட்டிருந்த ஏழு அடி ஆழமான கிடங்கில் தவறுதலாக விழுந்துவிட்டார்

இதனால் அவரில் தீப்பிடித்துக் கொண்டதில் கருகி மரணமானார். [86]

## பலியான சிப்பாய்கள் 7ஆக அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித்தாக்குதலில் பலியான இராணுவத்தினரின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு

கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்று மேற்படி லொட்ஜில் உள்ள தமிழர்களை சோதனை செய்யப் போவதாகக் கூறினராம்.

அனைவரையும்பாஸ்போட் அடையாள அட்டை என்பனவற்றுடன் அறை ஒன்றினுள் செல்லுமாறு அழைத்துள்ளனர்.

இதனை அடுத்து லொட்ஜ் உரிமையாளர் அவ்வாறே அனைவரையும் அழைத்துக் கொண்டு தானும் அவ்விடம் சென்ற போது கொள்ளையர் தமது கைவரிசையைக் காட்டி விட்டு அனைவரையும் அவ்வறையினுள் பூட்டி வைத்து விட்டு பணம் நகை என பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அத்துடன்லொட்ஜில் இருந்து வெளியே தொடர்பு எதுவும் ஏற்பட்டு விடாதவாறு தொலைபேசி இணைப்புக்களை கொள்ளையர்கள் அறுத்து விட்டிருந்தனர் என தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஒரு பெண் மட்டும் 7 பவுண் தாலியுடன் கொடியும் ஏனைய சில நகைகளுமாக 20 பவுண் நகையும் 75000ரூபா பணமும் கொள்ளையரிடம் பறிகொடுத்துள்ளார் என தெரியவருகின்றது.
(பா) (நி)

# செச்சென்ய மீதான தாக்குதல் ரஷ்யா கைவிடுமாம்

ரஷ்யாவிலிருந்து பிரிந்து தனிநாடு என தன்னை அறிவித்த செச்செனிய குடியரசின் மேலான இராணுவ நடவடிக்கை கைவிடப்படும் என ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள செய்தியொன்றில் ரஷ்ய இராணுவம் விரைவில் தங்கள் முகாம்களுக்குத் திரும்பும் எனவும் தெரிவித்துள்ளார்.

யெல்ட்சினின் இவ் அறிவிப்பால் ரஷ்ய -செச்செனியபேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகுமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு ஜூலைக்கு முன் தீர்வு காண்போம்

### அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்னர் ஒரு நிலையான தீர்வை வழங்குவோம் என தபால் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நிமிடமும் சுமார் நாற்பத்தியொரு ஆயிரம் ரூபாவை விழுங்கும் இவ் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் அதற்கான ஓர் வழியில் தமது அரசாங்கம் தற்போது சென்றுகொண்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு ஒன்று ஏற்பட்டால் மட்டுமே நாட்டை புதிய பொருளாதார திட்டத்தின்கீழ் கொண்டுவர முடியும் என்றும் இதன் மூலமே நாட்டை அபிவிருத்தி சுபீட்சம் கொண்ட நாடாக கட்டியெழுப்பமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# நாடு இன்று காடாகி வருகிறது மக்கள் கிளர்ச்சி தவிர்க்க முடியாதது

### ராவய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு இன்று காடாகி வருகிறது. நாடு ஓர் அபிவிருத்திப் பாதையில் செல்லும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு இன்று பொய்யாகிப் போய் விட்டது என ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமானால் மக்கள் கிளர்ச்சியொன்றைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும். இதனைத் தவிர்ப்பதானால் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை அரசாங்கம் தற்பொழுது தோன்றியுள்ள வேலை நிறுத்தங்களை முழுமையாக உற்று நோக்காமல், வேலை நிறுத்தங்கள் நடைபெறும் இடங்களில் மட்டும் தீர்வு கண்டு வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

## பருத்தித்துறையில் படகு மூழ்கியது

(வடமராட்சி)

கடலில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் சேவையில் ஈடுபட்ட படகு ஒன்று முருகைக் கல்லுடன் மோதுண்டு பலத்த சேதமடைந்தது.

இப்படகு பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்று பொருள்களை இறக்கி கரைக்கு எடுத்துவரும் பாஜ்களை கட்டி இழுத்து வருவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது.

இப் படகு சேதமடைந்ததும் நீரில் மூழ்கியது. பின்னர் தொழிலாளிகளினால் கரைக்கு இழுத்து வரப்பட்டது. இதனையடுத்து கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை பிற்பகல் ஒரு மணியுடன் நிறுத்தப்பட்டது.
[யோ]

## விபத்து

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளம்பெண்ணைவேகமாக வந்த லொறி மோதியதால் அப்பெண் படுகாயம் அடைந்துள்ளார். நேற்று பிற்பகல் யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் இவ் விபத்து இடம்பெற்றது.
(22)

## பூநகரி

அமைவாகவும், பொதுமக்களின் போக்குவரத்திற்கான

## வட-கிழக்கு

ணத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த தசாநாயக்காவும், தென்மாகாண சபை ஆளுநராக முன்னாள் வெளிநாட்டு தூதுவரான நெவில் கனகரட்ண

## கல்வி

தலிங்கம்.

### கணிதம்

திரு. ந. சிறீமுருகதாஸ் காந்தன், திரு. மு.நடராசா, திரு. க. மகேந்திரகுமார், திரு. வே. சிவசீலன், திரு. இ. ஜெயகாந்தன், திரு.ப. அசோகன், திரு. மா. அருவதனன், திரு. செ. முரளீதரன், செல்வி யோ. கதிரவேற்பிள்ளை, திரு. க முரளீதரன் செல்வி வ. ஜெயஸ்ரீ, செல்வி ஆ. சிவபாலன்.

### சித்திரம்

செல்வி ம. தர்மதுரை, செல்வி ரா.புஸ்பராசா, திரு. பா. பிரபாகரன், செல்வி புளோரின் நைல்ஸ் ஜெயநாதன், செல்வி சு. சிவலிங்கம், செல்வி கௌசல்யா சிவகுமாரசர்மா.

### சங்கீதம்

செல்வி அ.பத்மநாதசர்மா, செல்வி த. சோமசுந்தரம்,


# ஆனையிறவுப் பகுதியில் 4போராளிகள் வீரச்சாவு



மேஜர் இதயன்



கப்டன் சுரேந்தர் (தட்சணாமூர்த்தி)



லெப். செல்வம்



லெப். சுபேசன்

ஆனையிறவுப் பகுதியில் கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் சிறிலங்கா இராணுவத்துடனான திடீர் மோதலில் வீரச் சாவடைந்த நான்கு போராளிகள்.

## காணாமல்போன

மற்றும் ஆட்கடத்தல் பற்றியும் இக்குழுக்கள் ஆராயும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விசாரணைக் குழுக்களிலிருந்து முழுமையான அறிக்கையொன்றை நான்கு மாத காலப் பகுதியில் கையளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்பு விடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## க.பொ.த.

ஐந்தாம்இடத்தையும், வவுனியா47 78 வீதத்தைப் பெற்று பத்தாம் இடத்தையும், கிளிநொச்சி 44.78 வீதத்தைப் பெற்று பதினைந்தாவது இடத்தையும் மட்டக்களப்பு 46.55 வீதத்தைப் பெற்று

## கண்ணிவெடி

வும் அச்சிப்பாய் மேலும் தெரிவித்தார்.

இக்கண்ணிவெடி சம்பவத்தில் 5 க்கும் மேற்பட்ட படையினர் பலியானதுடன் 20 பேர் படுகாயம் அடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஆயுதக்

பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மிகச் சக்தி வாய்ந்த ஆர். டீ. எக்ஸ் வெடிமருந்து, ஐந்து துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், கைக்குண்டுகள், வெடிக்கவைக்கும் உபகரணங்கள், இருளிலும் பார்க்கக்கூடிய தொலைநோக்கி ஆகியன கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு பெருந்தொகை

உ
சிவமயம்

# முதலாமாண்டு நினைவு





## சிவநெறிச் செம்மல் ச. நமசிவாயம்

(சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய
முன்னாள் பிரதம காப்பாளர்,
சாவகச்சேரி அம்பிகா மருந்தக உரிமையாளர்)

**தோற்றம்:** 22-08-1937 **சிவபதம்:** 06-01-1994

**ஆண்டுத்திதி: மார்கழி அபரபக்க தசமி 27-12-94**

சிந்தனையால் சீரியநன் நடத்தை யினால்
சிவநெறியைச் சிறக்க வைத்தாய் ஊரினிலே
எந்தவொரு நோயாளி வந்தாலும் நோய் தீர
தந்த தனைப் பெற்று தரும மருந்தளிப்பாய்
எந்தவிடர்வந்தாலும் எதிர்கொண்டு எமைக்காத்தாய்
தண்ணிழலாய் எமக்கெல்லாம் தகுந்தவழியமைத்தாய்
தண்ணிழலே எங்குற்றாய் ஏங்கிமன மிரங்குகிறோம்
ஊரில் உலகத்தில் மற்றுமுள வைகூட.
மாறும்; உருவத்தில் பருவத்தில் பாங்காக
மாறவில்லை உன்நினைவு உன் உருவும் அப்படியே?

சரசாலை வடக்கு, குடும்பத்தினர்,
சாவகச்சேரி. உறவினர்கள்.

(10510)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### பூநகரி

அமைவாகவும், பொதுமக்களின் போக்குவரத்திற்கான பாதையைத் திறக்கவேண்டியது அவசியம் என்பதாலும் பூநகரிப்பாதை திறக்கப்படும் சாத்தியம் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வினாத்தாள்

க்கு அறிவிக்குமாறு யாழ். கல்வித்திணைக்கள வலயம் ஒன்று கல்விப்பணிப் பாளர் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தைக் கோரியுள்ளார்.

காண சபை ஆளுநராக முன்னாள் வெளிநாட்டு தூதுவரான நெவில் கனகரட்ணவும், மத்திய மாகாணத்திற்கு முன்னாள் சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்டான்லி திலகரட்னாவும் மேல் மாகாணத்திற்கு முன்னாள் நீதிபதி கே- விக்னராஜாவும், சப்பிரகமுவ மாகாணத்திற்கு முன்னாள் கொலனாவை தேர்தல் தொகுதி உறுப்பினரும் அமைச்சருமான டி- பி- இலங்கரட்னாவின் மனைவி கமலகுமாரி இலங்கரட்னாவும் நியமனம் பெற்றுள்ளனர்.

## யாழ். வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப் பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும் ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. **சலுகை செய்திகள்** முதல் 15 சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. **வழமைச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்.

3. **வியாபாரச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்.

(மேற் கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்.)

**அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (சி-10872)

சங்கீதம்

செல்வி அ.பத்மநாதசர்மா, செல்வி த. சோமசுந்தரம், திருமதி த. தயாபரன், செல்வி சு. கணேசன், செல்வி அ. குணசேகரன்.

நடனம

திருமதி விமலகுமாரி ஸ்ரீ ரவிகுலன், செல்வி வ. சிவஞானம், செல்வி ப. தருமலிங்கம், செல்வி வ. கந்தசாமி.

ஆங்கிலம்

செல்வி ஜெ. சோமசுந்தரசர்மா, செல்வி அ. கந்தையா, செல்வி வா. சிவப்பிரகாசம், செல்வி ஆ. மரியதீற்றா, செல்வி ரா. செல்வநாதன், திரு. பொ. குமாரசிங்கம், செல்வி வி. அந்தோனிப்பிள்ளை, செல்வி உஷாநந்தினி சிவநேசன், செல்வி வஜீதா தருமராஜா, திரு. த. ஆனந்தவடிவேல், செல்வி கீ. சங்கரப்பிள்ளை, செல்வி உ. குலசேகரம்.

### ஆனையிறவு

பட்ட மோதலில்:

★ லெப். செல்வம்; நாகராசா தனராசா சுப்பர் மடம், பருத்தித்துறை
★ லெப். சுபேசன்; நடராஜா நீலமேகன் பல்லப்பை புலோலி தெற்கு, பருத்தித்துறைஆகிய இருபோராளிகள் வீரச்சாவடைந்தனர்-

இந் நான்கு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்-

### பரீட்சைத் திகதி

விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக கொழும்புடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கொழும்பில் இருந்து இப் பரீட்சை தொடர்பான விபரங்கள் கிடைக்கப் பெற்றதும் பரீட்சார்த்திகளுக்கு தெரிவிக்கப்படவுள்ளதாக மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ) [பா]

பெற்று பதினைந்தாவது இடத்தையும் மட்டக்களப்பு 46.55 வீதத்தைப் பெற்று பன்னிரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன.

கொழும்பு 43.72 வீதத்தைப் பெற்று பத்தொன்பதாவது இடத்தை பெறுவது குறிப்பிடத்தக்கது.

மொத்தமாக தோற்றிய 1,26,345 பரீட்சார்த்திகளில் 56,738 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள மாணவர்களில் நான்கு பாடங்களிலும் ஏ தரத்தைப்பெற்ற மாணவர்களின் விபரமும் வெளியாகியுள்ளது.

இதன்படி கொழும்பில் 57 மாணவர்களும், யாழ்ப்பாணத்தில் 28 மாணவர்களும், கண்டியில் 16 மாணவர்களும் 4 'ஏ' க்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நோக்கி ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு பெருந்தொகையான ஆயுதங்கள் ஒரு கொள்ளைக் கோஷ்டியிடமிருந்து கைப்பற்றப்பட்டது இதுவே முதற் தடவை எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி
### சுகிர்தராணி பதுவைநாயகம் (B. Sc)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நவாலி தெற்கு அரசடி வீதி, முகவரியைச் சேர்ந்தவருமாகிய திருமதி சுகிர்தராணி பதுவைநாயகம் (முன்னாள் ஆசிரியை, நவாலி மகா வித்.) 26-12-94-ல் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. அ. பதுவைநாயகம் (அதிபர், யாழ். சுன்னாகம் றோ. க. பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும், அன்ரன் கிருபைநாயகத்தின் (மாணவன் நவாலி மகா வித்.) பாசமிகு தாயாரும், திரு. ந. சற்குணராஜா (ஓமான்), திரு. பு. அமலதாஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி செ. இராஜபாலி (லண்டன்) திருமதி ச. மகாதேவன் (மின்சாரசபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. அ. இம்மானுவேல் (யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி ஹ. செல்வராசா, திருமதி ச. பரமேஸ்வரன் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனியுமாவார்,

அன்னாரின் பூதவுடல் இன்று 27-12-94 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து நவாலி சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. அ. பதுவைநாயகம்
[கணவர்]

(10505)